★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5560

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 17உ புதன் (1—8—56) ★ ★ வெளியீடு: ஆடி 18உ வியாழன் (2—8—56) [இதழ் 44

எவ்வளவு பணம் தேவை?

"தனிப்பட்டோர் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் அளிக்கப்படும் ஊதிய விகிதங்களைப்போலவே இருக்க வேண்டுமென்று திட்டக்குழு சிபாரிசு செய்துள்ளது. இச்சிபாரிசை அமுல்நடத்த எவ்வளவு பணம் தேவையாக இருக்குமென்று ஆராய்ந்து தங்களுக்குத் தகவல் தெரிவிக்குமாறு மாநில சர்க்கார்களை இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளனர்" என்று மக்கள் சபையில் கல்வி இலாகா உதவி மந்திரி தெரிவித்துள்ளார்.

'புரட்சிக் குழந்தை'களின் பதவிப் போட்டி!

ஒரிசா காங்கிரஸ் கட்சிக்குத் தலைவர் யார்?

அரிகிருஷ்ண மகதாபை ஒருகோஷ்டி விரும்புகிறது!

விஸ்வநாததாசை மற்றொரு குரூப் கோருகிறது!

பிரச்னைக்கு முடிவுகாண வங்க முதலமைச்சர் நியமனம்

கட்டாக், ஜூலை 31—

ஒரிசா காங்கிரஸ் கட்சி இரு கோஷ்டியாகப் பிரிந்துள்ளது.

காங்கிரஸ் தலைவராக இருந்துவரும் ராமகிருஷ்ண சவுத்திரி பதவியைவிட்டு விலக விரும்புகிறார்.

அவருக்குப் பதிலாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் கோஷ்டிப் பூசல் தலைகாட்டி இருக்கிறது.

பம்பாய் கவர்னராக உள்ள அரிகிருஷ்ண மகதாபைத் தலைவராக ஏற்றுக்கொள்ள ஒரு கோஷ்டி விரும்புகிறது.

அவர் தலைமையை மற்றொரு கோஷ்டி எதிர்ப்பதுடன், விஸ்வநாத் தாசை தலைவராக ஆக்கவேண்டும் எனக் கோருகிறது.

இந்தத் தலைவர் பிரச்னையில் முடிவு காணும் பொறுப்பை வங்க முதலமைச்சர் டாக்டர் பி. சி. ராய் அவர்களிடம் காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி குழு ஒப்படைத்திருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★

கே. ஆர். இராமசாமி

மலேயா பயணம்

★

நடிப்பு இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், 3-8-56 வெள்ளி காலை 9-மணியளவில், மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பிரயாணமாகி நாடகக் கலைப் பணியாற்ற மலேயா செல்கிறார்.

அவருடன் அவரது நாடகக் குழுவினரும் நண்பர்களுமாக 36 தோழர்கள்வரை உடன் செல்லுகிறார்கள்.

★★★★★★★★★★★★★★★★

ஐந்தாண்டுக்குள் மறு பரிசீலனை?

புதுடில்லி, ஜூலை 31—

பம்பாய் நகரின் எதிர்காலம் பற்றிய பிரச்னையை ஐந்தாண்டுக்குள் மறுபரிசீலனை செய்யும்படியாக மக்கள் சபையில், மாநிலச் சீரமைப்பு மசோதாவுக்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்படும் எனத் தெரிகிறது. இதற்கான இறுதி திட்டம் தயாரிக்கும் வேலை ஆசாத் — பந்த் — படாஸ்கர் ஆகியோர் கொண்ட குழு ஒன்றிடம் விடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மைசூர் காங்கிரஸ் கட்சிக்குள் ஒன்பது கோஷ்டி!

அவை ஒன்றோடொன்று பதவிக்கு அடித்துக்கொள்ளும் விந்தை!

முதலமைச்சர் அனுமந்தையா தரும் விளக்கம்

மைசூர், ஜூலை 31—

"கர்நாடகக் காங்கிரஸ் கட்சிக்குள் இப்பொழுது ஒன்பது கோஷ்டிகள் உள்ளன; 'அவை, ஒன்றோடொன்று அதிகாரத்திற்கு அடித்துக் கொள்ளுகின்றன. விரிவாக்கப்பட்டுள்ள மைசூர் மாநிலத்திற்கு இது மகிழ்ச்சிகரமான துவக்கமாக இருக்காது."

இத்தகவலை, மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

"கோஷ்டிச் சண்டையும், பொறாமையும் காங்கிரஸ் கட்சிக்குள் வளர்ந்துகொண்டு வருகின்றன. இதை [illegible] படவில்லையானால், தேர்தலில் காங்கிரஸ் கட்சியினரை அதே கட்சியினர் எதிர்த்துப் போட்டியிடும் நிலை வந்தே தீரும்.

"மைசூர் காங்கிரசிற்குள் ஒற்றுமையை உருவாக்க 'உயர் நிலையினர்' எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. உலகில் உச்சநிலையில் இருப்பவர்களால்தான் காங்கிரசிற்குள் நட்புறவை ஏற்படுத்துவது சாத்தியமாகும்."

மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவர், மைசூர் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்பம் வெறும் குழப்பப் பிரச்னையேயாகும் என்றும், காங்கிரஸ் சட்டசபை கட்சிக்கும் பிரதேச காங்கிரசிற்கும் ஏற்பட்டுள்ள பிணக்கே அல்லாது வேறு ஒன்றுமில்லை என்றும் வெளியிட்டுள்ள கருத்தை முதலமைச்சர் அனுமந்தையா பலமாகக் கண்டித்துள்ளார்.

'நடுநிலையாளர் பதவியை ஏற்றுக் கொள்வதற்கில்லை'

ஆசாத், இராதாகிருஷ்ணன் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 31—

மாநிலச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாநிலங்களுக்கிடையில் எழும் எல்லைத் தகராறுகளைத் தீர்க்க நடுநிலையாளராக இருக்கும்படி பார்லிமெண்டு காங்கிரஸ் கட்சி அனுப்பிய கோரிக்கையை குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் எஸ் இராதாகிருஷ்ணன் ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

தாம் குடியரசுத் துணைத் தலைவராகப் பதவி வகிப்பதாலும், மேல் சபை தலைவராக இருப்பதாலும் தாம் சர்ச்சைக்கிடமான விஷயத்தில் கலந்து கொள்வதற்கில்லை என்று அவர் குறிப்பிட்டாராம்.

பாராளுமன்றக் காங்கிரஸ் கட்சி கூட்டத்தின்போது, எல்லைத் தகராறுகளை சுமுகமாகத் தீர்த்து வைக்க மௌலானா ஆசாத் உதவியைக் கோரினர். ஆனால் அவர் தமக்கு அவகாசமில்லை என்று கூறினதால்தான் டாக்டர் இராதாகிருஷ்ணனைக் கேட்பதென்று கமிட்டி தீர்மானித்ததென்று தெரிகிறது.

காங்கிரஸ் கட்சி, நடுநிலையாளர் அல்லது எல்லைக் குழு நியமிக்காதென்த் தெரிகிறது.

மகாராட்டிரா—குஜராத், மகாராட்டிரா—கர்னாடகம், கர்னாடகம்—கேரளா தகராறுகள் சம்பந்தமாக இந்த யோசனை கூறப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

பிப். 20 அர்த்தால் எதிரொலி

மதுராந்தகம் தோழர்கள் மீது வழக்கு

20—2—56ல், நடைபெற்ற அர்த்தாலின்போது கைது செய்யப்பட்ட தோழர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, இரண்டாவது சப்-மாஜிஸ்திரேட் அவர்களால் விசாரித்து தள்ளுபடி செய்யப்பட்டது.

மீண்டும் வழக்கு 314 இ. பி. கோ., சிட்டி போலீஸ் சட்டம் 35-வது பிரிவுப்படி மூன்றாவது சப்-மாஜிஸ்திரேட் அவர்களால் நடத்தப்பட்டு இப்போது செங்கற்பட்டு மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது.

வழக்கில் சம்பந்தப்பட்ட தோழர்கள்:—ஓ. என். துரைபாபு (பஞ்சாயத்துத் தலைவர்), பி. சிவானந்தம், எ. சண்முகம், எம். இ. ரோஸ் ஆகியோர்.

இராசபாளையம் காங்கிரசார் முயற்சி தோற்றது!

நெல்லை — இராமநாதபுரம் மாவட்டங்களில் மு. கருணாநிதி வெற்றிகரமான சுற்றுப்பயணம்

இராசபாளையம், ஜூலை 29—

'......இதுபோன்ற சலசலப்புக்கு அஞ்சமாட்டோம்; எங்கள் இயக்கம் எதிர்ப்பிலே வளர்ந்த அழகிரிசாமிகளைக்கொண்டது; கண்ணியத்தின் காவலர் அண்ணாவின் அறிவுரையின்படி பணியாற்றுவது; எம்மை, இதுபோன்ற பலாத்கார நடவடிக்கைகளால் யாரும் அழித்துவிடலாமென்று கனவு காண வேண்டாம்; இங்கிருக்கிற பல்லாயிரக்கணக்கான பொது மக்களும் கோழைத்தனத்தால் ஓடிவிட்டால்கூட நானொருவன் தனித்து நின்று கொள்கைக்காக உயிர்விடத் தயாராய் இருக்கிறேன்; எமது பேச்சால் இந்த ஊரில் ஆயிரம் பேர் திருந்துவார்கள் என்றால், காங்கிரசாரின் இத்திய செய்கையால் பத்தாயிரம் பேர் திருந்துவார்கள்; எமது பிணம் இங்கு வீழ்ந்தால் இராசபாளையமே எமது பாசறையாகும்,"

என்று, தோழர் மு. கருணாநிதி அவர்கள், இராசபாளையம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில், காங்கிரஸ் கட்சியினர் சிலர் குழப்பம் செய்ய முயற்சித்ததைக் கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவரது சுற்றுப்பயணத்தின் விவரங்கள் இங்கு தரப்படுகிறது:—

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்களின் மனதை புண்படுத்தினர் —கோரிக்கைகளை மதிக்க மறுத்தார்

கிராமங்கள் தோறும் இலங்கைப் பிரதமருக்குக் கருப்புக் கொடி வரவேற்பு

பலமிக்க பாதுகாப்புகள் இருந்தும் ஊர்வல நிகழ்ச்சியைக் கைவிட்ட பரிதாபம்

பிரதமருக்கு மாலை சூட்டு வைபவம் நடைபெறும்பொழுது நூற்றுக்கணக்கான மக்கள் கருப்புக் கொடிகளை உயர்த்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கையிலிருந்த கருப்புக் கொடிகளைப் போலீசார் பறித்து முறித்து எறிந்தனர்.

கருப்புக்கொடிகளைக் காட்டி தம்மை வரவேற்றவர்களுக்கு பிரதமர் தம் பேச்சின்போது நன்றி தெரிவித்தார்.

மட்டக் களப்பிலிருந்து கல்முனை வீதி வரையிலுள்ள சகல கிராமங்களிலும் தெருவெங்கும் கருப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

இலங்கை—கல்லோயா பள்ளத்தாக்கில் நடைபெற்ற கலவரங்களைப் பார்வையிட கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்த பிரதமரும், மற்றும் உணவு மந்திரி, நில அபிவிருத்தி மந்திரி ஆகியோரும் ஒரு பகுதி மக்களின் குறைபாடுகளையே விசாரணை நடத்தி வந்திருக்கின்றனர்.

கல்லோயாவிலும், மட்டக்களப்பிலும் விசாரணை நடத்தியவர்கள் சிங்கள மக்களினால் சொல்லப்பட்ட புகார்களையும் — குற்றச்சாட்டுகளையுமே கேட்கமுடிந்தது. தமிழ் பேசும் மக்கள் அடைந்த அவலநிலையை எடுத்துப்பேச—சந்தர்ப்ப

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ்
சென்னை 1—8—'56 புதன்

எங்கே பதில்?

நிதி அமைச்சர் பதவியை விட்டுத் துறந்த தேஷ்முக் அவர்கள், பண்டித நேருவின் அமைச்சரவை எவ்வாறு செயல்பட்டு வருகிறது; பிரதமர் என்ற முறையில் பண்டிதர் எவ்வாறு நடந்துகொள்ளுகிறார்; மற்றக் கூட்டு அமைச்சர்களிடம் அவர் எந்த அளவிற்கு மதிப்புக் காட்டுகிறார் என்ற உண்மைகளை, தனது ஆறு ஆண்டுக்கால அனுபவத்தைக்கொண்டு அம்பலப்படுத்தி இருக்கிறார். அந்தப் பேச்சு இந்தியப் பிரதமருக்கு ஆத்திரத்தை மூட்டி இருக்கிறது. அளவு கடந்த ஆத்திரத்திற்கு இரையாகிவிட்ட பண்டிதர், குற்றஞ்சாட்டப்பட்ட நேரத்திலேயே பதில்கூற முடியாது, குற்றச்சாட்டில் காணப்படும் உண்மைகளை அப்பொழுது மழுப்ப முயற்சித்து இருக்கிறார்.

அப்பொழுது, பதவியை விட்டு விலகும் நிதி அமைச்சர் கூறும் தகவல்கள் அனைத்தும் முழு உண்மை அல்ல என்றும், சர்ச்சையில் இறங்கத் தமக்கு விருப்பமில்லை என்றும், ஐந்தாண்டுக்குப் பிறகு மக்களால் பம்பாய் நகரின் எதிர்காலம் முடிவு செய்யப்படும் என்ற ஒன்றுதான் தாம் மிகைபடக் கூறியதாகும் என்றும் பிரதமர் பண்டித நேரு பதிலாகக் கூறினார். ஆனால், அவ்வாறு பதில் கூறினதுடன் திருப்திகொண்டுவிட்டவர்போல் ...ன்று காணப்பட்ட பிரதமர், ...றைவு பெருதவராகவே இருந்து வந்திருக்கிறார் என்ற உண்மை, அவர் மீண்டும் பதில் கூற முன்வந்ததிலிருந்து தெளிவாகிறது.

பிரதமர் மிக முயன்று இப்பொழுது கூறிய பதிலும், பிரதமரின் எதேச்சாதிகாரம் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிட்ட நிதி அமைச்சர் தகவலை நேருக்கு நேராக மறுப்பதாக அமையவில்லை. நிதிஅமைச்சர் கூறிய உண்மையில் படிந்துள்ள மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பும் பெரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்றுதான், பிரதமர் கூறிய விளக்கத்திலிருந்து எவரும் முடிவு கட்ட வேண்டியதாக இருக்கிறது.

கூட்டு மந்திரிகளை அலட்சியப்படுத்திவிட்டு, தானென்ற முனைப்பில் செயல்பட்டுவருவது பிரதமர் நேருவின் நீண்டகாலப் பழக்கமாகும் என்று தாம் கூறிய குற்றச்சாட்டிற்கு எடுத்துக்காட்டாக, ஆந்திரப் பிரிவினையை தேஷ்முக் சுட்டிக் காட்டி இருக்கிறார். அதுபற்றி பிரதமர் நேரு, இன்றும் பேசாமடைந்தையாகவே இருந்துவிட்டிருக்கிறார்.

பம்பாய் நகரை மகாராட்டிர மண்டலத்துடன் இணைக்க வேண்டுமெனக்கோரி மராட்டிய மக்கள் இருமுறை செய்த கிளர்ச்சிகளிலும், போலீஸ் படையினர், தேவைக்கு அதிகமான பலாத்காரத்தை வேண்டுமென்றே பயன்படுத்தி, பெண் என்றும் சிறுர் என்றும் பாராது மக்களைச் சுட்டுக் கொன்று இருக்கின்றனர் என்றும், நீதிபதி ஒருவரைக் கொண்டு உண்மையை ஆராய்ந்து அறிய வேண்டும் என்றும், தமது முதல் அறிவிப்பில் தேஷ்முக் முறையிட்டுக் கொண்டிருந்தார். அதுபற்றி கூறும்பொழுது, 'கொல்வதற்காகவே சுடு' எனவும், 'தலையைக் கண்டதும் சுட்டுக் கொல்லு' எனவும், பம்பாய் அரசாங்கம் போலீஸ் அதிகாரிகளுக்கு இட்டிருந்த கட்டளையையும் தேஷ்முக் எடுத்துக் காட்டியிருந்தார்.

அதுவுமன்றி, வீட்டில் இருந்த மராட்டியர்களை நடுத்தெருவில் வரச்செய்ய வேண்டும் என்பதற்காக வீடுகளில் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசி, அவை வெடித்துக் கிளம்பும் புகையினுல் மூச்சுத் திணறி, பார்வை மங்கி வீதிக்கு ஓடிவரும் மராட்டியர்களை நோக்கி, வேண்டுமென்றே போலீஸ்துறை சுட்டுக் கொன்ற கொடுந்தன்மையையும் நிதி அமைச்சர் எடுத்துக் காட்டி, உண்மைஅறிய ஆய்வுக் குழுவை நியமிக்கும்படி தாம் நேருவை வற்புறுத்தியதாக தேஷ்முக் சுட்டிக்காட்டி இருந்தார். அவ்வேண்டுகோளை பண்டிதர் நிராகரித்துவிட்ட இரக்கமற்ற செயலையும் தேஷ்முக் சாடி இருந்தார்.

குடிஉரிமையைக் குறித்து எப்பொழுதும் பேசி வருகிறவர்கள், அதற்குக் கேடு சூழப்பட்டு இருக்கிற பொழுது, அதைக் காக்கும் செயலில் ஈடுபட மறுப்பது நியாயமாகுமா என, பிரதமரையும் உள்நாட்டு அமைச்சரான பண்டித பந்த் அவர்களையும் நேரடியாக வேதனையுடன் சாடி இருந்தார்.

பண்டிதர் தந்துள்ள பதிலில் இதுபற்றி மூச்சே இல்லை. முழு பூசணியைச் சோற்றில் மறைப்பதுபோல் பண்டிதர் மவுனம் சாதித்துவிட்டிருக்கிறார்.

தேஷ்முக் அவர்களின் நியாயமான முறையீடுகளுக்குப் பதில் கூருது இருந்துவிட்ட பிரதமர் நேரு அவர்கள், தாமும தமது கட்சியைச் சேர்ந்தவர்களும் மட்டுமே 'இந்தியப் புரட்சி'யின் குழந்தைகள் என தற்பெருமை அடித்துக்கொள்வதில் முனைந்திருக்கிறார். ஏழைகள் பற்றியும் உழவர்கள் குறித்தும் கவலை கொள்வதில் மற்றவர்களுக்கு உள்ளதைவிட, தங்களுக்கே அதிக அக்கரை உள்ளது என்றும் பொக்கம் பேசிக் கொண்டிருக்கிறார்.

அத்துடன் திருப்திகொண்டுவிடாது, காங்கிரஸ் கட்சியைப் பணமூட்டைகள் கட்சி என எவரும் சொல்லக்கூடாது எனவும் பண்டிதர் கட்டளை பிறப்பிப்பதுபோல் கொக்கரித்திருக்கிறார்.

புரட்சிக் கனல் அணைந்து போகாத இந்தப் புரட்சி வீரர்கள், தேஷ்முக் போன்றவர்களைக் கூட்டு அமைச்சர்களாகக் கொண்டிருக்க எவ்வாறு ஒப்பினார்கள் என்பது நியாயமான கேள்வியேயாகும். தங்களைப் பற்றி புரட்சி வீரர்கள் என்றும், தேஷ்முக் போன்றவர்களை அதற்கு மட்டமாகவும் எண்ணிக் கொண்டு இருப்பவர்கள், கூட்டாகச் சேர்ந்து செயல்படும் பொழுது, தங்களிலும் மாற்றுக் குறைந்திருப்பவர்கள் எனக் கருதுபவர்களிடம் மதிப்பு வைத்து நடக்கமாட்டார்கள் என்பது சொல்லாமலே விளங்கக் கூடியதாகும்.

அவர்கள் கூற்றுப்படி புரட்சி அறியாத நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்களிடம், பண்டிதர் உட்பட மற்ற காங்கிரஸ் புரட்சி அமைச்சர்கள் அலட்சியமாகத்தான் நடந்துகொண்டு இருப்பார்கள் என்பதற்கு, பண்டிதர் சுட்டிக் காட்டிய அவர்களுடைய மனப்போக்கே போதிய சான்ருகும். அத்தகு மனப்போக்கில் மறைந்துள்ளது வடிகட்டின அகந்தையே அல்லாது, மக்களாட்சியை மலரச் செய்யக்கூடிய உயர்பண்பு அல்ல.

எனவே, பண்டித நேரு அவர்கள் கூறிய விளக்கம், தேஷ்முக் அவர்களின் வெளிப்படையான குற்றச்சாட்டுகளுக்கு ஒப்புதல் அளிப்பதாக முடிந்திருக்கின்றதே ஒழிய, பண்டிதரின் மக்களாட்சி மாண்பை உறுதி செய்வதாக இல்லை.

ஆச்சாரியார் திட்டம்

காரிய சாத்தியமற்றதாம்!

சர்க்கார் கணக்குகள் அனைத்தும் சீர்குலைந்துவிடுமாம்!

தசாம்ச நாணயம் பற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி ஜுலை 30—

மக்கள் சபையில் ரெவின்யூ-பாதுகாப்புச் செலவு மந்திரி தெரிவித்துள்ளதாவது :—

" இராஜகோபாலாச்சாரியார் தெரிவித்த தசாம்ச நாணயத் திட்டத்தை சர்க்கார் கவனித்தனர்; ஆனல் அது காரிய சாத்தியமெனக் கருதவில்லை.

"அவர் திட்டத்தை ஏற்பதாக இருந்தால் ரூபாயின் மதிப்பை ரூ. 1-9-0 ஆக உயர்த்த வேண்டிவரும். இவ்விதம் செய்வதால், வரவு—செலவுத் திட்டம், தொழிற்சாலைகளின் ஊதியங்கள், வீட்டுவாடகை முதலிய கொடுக்கல் வாங்கல்கள் உள்பட சர்க்கார் கணக்குகள் அனைத்தும் சீர்குலையும்; ரூபாய்க்கு புதிய மதிப்பு நிர்ணயிக்குமாறு சர்வதேச நிதி நிறுவனத்தை அணுக வேண்டிவரும். ரூபாய் நோட்டுகள் அனைத்தையும் புதிதாக அச்சிடவேண்டிவரும்: ஏனெனில், இராஜகோபாலாச்சாரியார் திட்டத்தை ஏற்பதனல் இப்போதுள்ள ரூபாய் நோட்டு எல்லாம் பயனில்லாமல் போய்விடும்."

கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்!

கப்பல்களைச் செலுத்துவதற்கான இயந்திர சாதனங்களைத் தயாரிப்பதற்காக சர்க்கார் தரப்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதென்று கொள்கையளவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறதென்றும், அந்தப் பிரச்சினை இன்னும் திட்டமிடும் கட்டத்திலேயே இருக்கிறதென்றும், அத்தொழிற்சாலை எப்போது உற்பத்தி துவங்கும் என்று தற்சமயம் கூறுவது சாத்தியமில்லை என்றும் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து 1955—56ல் ரூ. 6,27,00,000 மதிப்புள்ள 13,63,00,000 டன் இரும்புக் கனி ஏற்றுமதியாறு.

மகாராட்டிரர் கொந்தளிப்புக்குக் காரணம் குசராத்தியர்களே!

'மகா குசராத்' வெளியீட்டின் எதிரொலி!

மக்கள் சபையில் படாஸ்கர் அறிவிப்பு

"தற்போது நிலவிவரும் மகாராட்டிரர் கொந்தளிப்புகளுக்கெல்லாம் காரணம், குசராத்திகள்தான். குசராத்திகளுடைய 'மகா குசராத்' வெளியீட்டின் எதிரொலியே இவைகளுக்கான காரணம்,"

என்று, அமைச்சர் படாஸ்கர், மக்கள் சபையில், மாநிலச் சீரமைப்பு மசோதா விவாதத்தின்போது பேசுகையில் கூறியிருக்கிறார்.

"மகாராட்டிரர்கள் மொழி—மாநில வெறியும், குறுகிய நோக்கும் கொண்டவர்கள்' என்று ஒரு நிலை உருவாக்கப்பட்டதாலும், 'ஒவ்வொரு மாநிலத்தின் எல்லைகளும் வெகு தொலைவுக்கப்பால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன' என குறைகூற முற்பட்டதாலும் மாநிலச் சீரமைப்புக் குழு நியமிக்கப்பட்டது. அந்நியமனத்தின் விளைவாக ஏற்பட்ட 'வற்புறுத்தல்'களே இந்நெருக்கடிகளுக்குக் காரணம்" என்றும் அவர் கூறினர்.

மகாராட்டிரத்தில் பாதியைக் கேட்கும் 'மகா குசராத்' வெளியீடு ஒன்று தம்மிடம் இருப்பதாகவும், அந்த வெளியீடானது குசராத் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றினுல் வெளியிடப்பட்டதென்றும், அக்கழகம், 'நாஜான்' போன்ற ஒரு நிறுவனம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

துவக்கக் கல்வி பொறுப்பு

மத்திய சர்க்காரே ஏற்க வேண்டுமெனக் கோரிக்கை

பாட்ன, ஜுலை 30—

இந்தியாவிலுள்ள எல்லாத் துவக்கக் கல்விகளுக்கும் ஒரேவிதமான உத்தியோக நிபந்தனைகளைத் தயாரித்து அவைகளை மத்திய சர்க்காருக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு அகில இந்திய துவக்கக் கல்வி ஆசிரியர்கள் சம்மேளன நிர்வாகக் குழு, ஒரு துணைக் குழுவை நியமித்திருக்கிறது.

இப்பொழுதுள்ள பாடத் திட்டங்களைப் பரிசீலனை செய்து, இந்தியா முழுதுக்கும் ஒரேவிதமான துவக்க கல்வி பாடத்திட்டம் தயாரிக்கும்படியும், ஒரே மாதிரியான சம்பள விகிதம் தயாரிக்கும்படியும் அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் சுமார் $4\frac{1}{2}$ இலட்சம் துவக்கக் கல்விப் பள்ளிக்கூடங்களும், 10 இலட்சம் ஆசிரியர்களும், 4 கோடி மாணவர்களும் இருக்கின்றனர்.

துவக்கக் கல்வியின் பொறுப்பை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படியும், துவக்கக் கல்வி போர்டு ஏற்படுத்தும்படியும் கேட்டுக் கொண்டு நிர்வாகக் குழு தீர்மானம் நிறைவேற்றியது.

போனஸ் தர சர்க்கார் சர்க்கார் இணங்கவில்லை!

தனிப்பட்டரீதியில் ரூ. 16 லட்சம் கொடுக்க முடிவு செய்தனராம்

புதுடில்லி, ஜுலை 30—

'சிந்திரி ரசாயன உரத்தொழிற்சாலையிலுள்ள ஊழியர்கள் தங்களுக்குப் போனஸ் தரவேண்டுமென்ற கோரிக்கைக்கு சர்க்கார் இணங்கவில்லை; எனினும், தற்காலிகத் தனிப்பட்ட ரீதியில் அவர்களுக்கு ரூ. 16-இலட்சம் கொடுப்பதென்று முடிவு செய்துள்ளனர்' என்று மத்திய உற்பத்தி மந்திரி மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அத்தொகையில் ஒரு பகுதி ஊழியர்களுக்கு ரொக்கமாகக் கொடுக்கப்படும்; மீதி, அவர்களுடன் கலந்தாலோசித்து அவர்களுடைய விசேட வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படும்.

'நாடு முழுமைக்கும் அபாயமாகும்!'

'அற்ப எண்ணங்களை பிரதமர் நேரு கைவிட வேண்டும்'

மக்கள்சபையில் என். வி. காட்கில் வற்புறுத்தல்

"அரசியல்—பொருளாதார—நிர்வாக நிலையிலிருந்து பார்க்கும் பொழுதும் சரி, மற்றும் எந்தக் கண்ணோட்டத்திலும் சரி, பம்பாய் நகரைத் தனி உறுப்பாகப் பிரித்துவைப்பது மகாராட்டிரர்களுக்கு மட்டுமல்லாமல், நாடு முழுமைக்கும் அபாயகரமானதாகும். கலவரம்போன்ற அந்த எண்ணங்களைப் பிரதமர் நேரு ஒதுக்கித் தள்ளிவிட்டு, பம்பாய் நகரை மகாராட்டிரத்துடன் சேர்ப்பதன்மூலம் நியாயமான காரியத்தைச் செய்து முடிக்க வேண்டும்,"

என்று, மக்கள் சபையில், மாநிலச் சீரமைப்பு மசோதாவின் மூன்றும் நாள் விவாதத்தின்போது பேசுகையில், என். வி. காட்கில் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரசிலிருந்து வெளியேறினர்

முன்னுள் கல்வி மந்திரி உள்பட 14 பேர் இராஜினுமா

ஜலந்தர் ஜுலை 28—

பஞ்சாபின் முன்னுள் கல்வி அமைச்சரான லாலா ஜகத் நாராயண் என்பாரும், மற்றும் 13 பஞ்சாப் சட்டசபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும், சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து இராஜினுமாச் செய்துவிட்டிருக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட இந்தக் குழுவினர் கூடிய கூட்டம் ஒன்றில் தான், தங்கள் பதவிகளைத் துறந்துவிடுவதென அவர்களனைவரும் தீர்மானித்தனராம்.

கட்சிக் கட்டுப்பாட்டைமீறி, காங்கிரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக இவர்கள் மீது ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி இவர்களுக்கு நோட்டீசு அனுப்பியிருந்தது.

டிராம்பேயில் இரசாயன உரத் தொழிற்சாலை?

புதுடில்லி, ஜுலை 30—

டிராம்பேயில் இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பது பற்றி பர்மா-ஷெல் கம்பெனியுடன் சர்க்கார் தாங்களாகப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கவில்லை என்றும், அப்படி ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான சில யோசனைகளை அவர்கள் சர்க்காரிடம் தெரிவித்தனர் என்றும், ஆனல் சில பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அதுபற்றி மேலும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த அவர்கள் விரும்பவில்லை என்றும் மத்திய உற்பத்தி மந்திரி, மக்கள் சபையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்துள்ளார்.

1955—56-ல் தேயிலை மீது விதிக்கப்பட்ட ஏற்றுமதி 'செஸ்' வரி மூலம் சுமார் ரூ. 1,58,75,976 வசூலாயிற்று; முந்திய ஆண்டில் இந்த வகையில் ரூ. 1,28,52,960 கிடைத்தது.

‘காங்கிரஸ் தலைவர்களின் ‘மிருகவெறி’க்கு மராட்டியர் ஆளாக்கப்படுகின்றனர்’

‘முன்னாள் கொள்கைக்கு முரணாக நடந்து அமைதியின்மையை சர்க்கார் உருவாக்குகிறது’

‘குருதி குடிக்கும் அட்டைக்குப் பதில் சிங்கத்தையே விரும்புகிறேன்’

காங்கிரஸ் மேலிடத்தின் முரண்பாடுகளை சி. டி. தேஷ்முக் அம்பலமாக்குகிறார்

புதுடில்லி, ஜூலை 30—

“பம்பாய் நகரை மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகப் பொறுப்பின் கீழ் கொண்டு வருவதானது அதை ஒரு தனி மாநிலமாக்குவதினால் ஏற்படும் விளைவுகளைவிடப் படுமோசமான நிலையில் தள்ளுவதுபோல் இருக்கிறது; ஏனெனில், பம்பாய் நகர் மட்டும் ஒரு ‘தனி மாநில’மாக இருக்குமானால், அது மகாராஷ்டிரத்துடன் சேர வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து முடிவு செய்ய 5 வருட காலத்திற்குக் காத்துக் கொண்டிருக்கத் தேவையே இல்லை.

“மகாராட்டிரர்கள் மிருக வெறிக்கு ஆளாக்கப்படுகிறார்கள்—கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; காங்கிரஸ் கட்சியின் முக்கிய சில தலைவர்களுடைய மிருகவெறியின் விளைவாக அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“எனக்கும் பிரதமர் நேருவுக்கும் தனிப்பட்ட முறையில் எவ்வித ‘விரோத மனப்பாங்கும்’ கிடையாது காங்கிரஸ் கமிட்டி. ‘ஓசியார்பூரில் நடைபெற்ற தடியடிப் பிரயோகம் குறித்து விசாரணை நடத்த வேண்டும்’ என்று முடிவு செய்ததை பிரதமர் ஆதரித்தார். இதையே அடிப்படையாகக் கொண்டுதான் பம்பாயில் நடைபெற்ற சம்பவங்களையும் குறித்து விசாரணை நடத்த வேண்டுமென்பதுதான் நான் முன்தினம் சபையில் தந்தவிளக்கவுரையின் வேண்டுகோளாகும்,”

என்று, மக்கள் சபையில் முன்னாள் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் அவர்கள், மாநிலச் சீரமைப்பு மசோதா மீது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“பம்பாயைப் பொறுத்து பிரதமரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள் மந்திரி சபையின் முடிவல்ல—மந்திரி சபையை ஏற்கனவே கலந்து செய்யப்பட்டதல்ல என்ற என்னுடைய குற்றச்சாட்டுக்கள் இன்னும் மறுக்கப்படாமலேயே இருக்கின்றன.

“கடந்த ஜூன் திங்கள் 3-ந் தேதி வெளியிடப்பட்ட கருத்தானது, மந்திரி சபையின் ஒருமித்த முடிவல்ல என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். அந்த முடிவு, காங்கிரஸ் கட்சிக் கூட்டம் ஒன்றில் பிரதமர் நேரு வெளியிட்ட சொந்தக் கருத்தேயாகும்.

“அதற்கு முன்னர், மந்திரி சபை உறுப்பினர்களிடத்தில் அது குறித்து ஆலோசனையோ, அல்லது என்னுடைய கவனத்திற்கோ அப்பிரச்சினை கொண்டுவரப்படவில்லை. அதுமட்டுமல்ல; பிரதமர் பம்பாயிலிருந்து திரும்பியபின், ஏறத்தாழ பன்னிரண்டு தடவைகள் மந்திரிசபை கூட்டங்கள் நடைபெற்றுங்கூட இம்முடிவு மந்திரி சபை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று ஏற்கனவே என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.

“முந்தின நாள் நான் கேட்டுக்கொண்டதின் பேரில்தான், சபை உறுப்பினர்கள், பம்பாயில் பிரதமர் கூறினவற்றின் நகல் பதிப்புகளை அதிகாரபூர்வமான முறையில் பெற்றிருக்கின்றனர்.”

‘பொறுக்குக் குழுவின் முன்னர், பிரதமரின் பம்பாய் பேச்சுக்கள் சமர்ப்பிக்கப்பட்டதே?’ என்று ஏ. எம். தாமஸ் என்பார் குறுக்கிட்டுக் கூறினதும் நிதி அமைச்சர் தேஷ்முக், “பொறுக்குக் குழுவின் முன் அது சமர்ப்பிக்கப்பட்டது உண்மையானால், ‘பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி நடவடிக்கைகளை வெளியிடுவதற்கில்லை—உறுப்பினர்கள் பார்வைக்கு வைப்பதற்கில்லை’ என்று பிரதமர் நேரு ஏன் கூறினார் என்று எனக்குப் புரியவில்லை” என்றார்.

உடனே பிரதமர் நேரு, ‘நான் எப்போது—எங்கு அவ்வாறு கூறினேன்?’ என்று தேஷ்முக் அவர்களைக் கேட்டார்.

உடனே தேஷ்முக் ‘நான் சபையில் கேள்வி கேட்டதும், அ. இ. கா. கமிட்டி நடவடிக்கைகளை சபை முன் சமர்ப்பிக்க முடியாது என்றும், உறுப்பினருக்கு அது தேவைப்பட்டால், அதனுடைய ஒரு நகல் எடுத்துக் கொடுக்கப்படும் என்றும் கூறினதைச் சுட்டிக் காட்டினார்.

உடனே பிரதமர் நேரு, சாதாரணமாக அவைகளை சபைமுன் சமர்ப்பிப்பதில்லை என்றாலும்கூட, அவை எல்லா இடங்களிலும் பிரசுரிக்கப்பட்டு விட்டதாகவும், உறுப்பினருக்கு அது தேவைப்பட்டால் அவரிடம் நேரடியாகவோ, அல்லது சபை முன்பாக வைக்கவோ முடியும் என்று மட்டுமே தான் சொன்னதாகவும் கூறி மழுப்ப முயற்சித்திருக்கிறார்.

அதற்கு தேஷ்முக், ‘சபையைப் போலவேதான் கூட்டுக் குழுவும் சம அந்தஸ்து பெற்றது; எனவே, மக்கள் சபையைவிட கூட்டுக் குழு ஒன்றும் அதிகச் சலுகைகள் பெற்றதல்ல’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் தொடர்ந்து தேஷ்முக் குறிப்பிட்டதாவது:—

“பம்பாயைப் பொறுத்த மசோதாவில் உண்மையான ஜனநாயக வழிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டாக வேண்டும்; சட்டபூர்வமான நடவடிக்கைகளுக்கோ, அல்லது, பெரும்பான்மைக்கு முரணாக இருக்கும் அநியாயத்தை எதிர்த்தோ எவ்வித உத்திரவாதமும் தரப்பட்டிருக்கவில்லை.

“இவைகளுக்கெல்லாம் மேலாக, இந்த 5 ஆண்டுகளில், பம்பாயின் நிலை தனது உச்சக் கட்டத்தை அடைந்துகொண்டே இருக்கும். ஒன்று அல்லது இரண்டு இலட்சம் மகாராட்டிரர்கள் பம்பாயைவிட்டு வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்படலாம் என்றுகூட நான் கணக்கிடுகிறேன். இது முற்றிலுமாக மூடி மறைக்கப்பட்டிருக்கவில்லை.

“பம்பாய் நகரிலுள்ள சர்க்கார் துறைகளில் வேலை செய்யும் 50,000 பேர் மீது சர்க்கார் தகுந்த கவனம் செலுத்தினாலும், நகரிலுள்ள மகாராட்டிரர் அல்லாத தனியார் துறைகளில், மகாராட்டிரருக்கு வேலை கொடுக்காமல் இருக்கும் ஈவிரக்கமற்ற தன்மையைப் போக்கச் சர்க்காருக்கு எந்தவித வழியும் கிடையாது. இந்த வகையில் எத்தனை பேர் பாதிக்கப்பட இருக்கின்றனர் என்பதை கணிப்பது நிச்சயமாக இயலாத ஒன்றாகும்.

“இந்த உண்மையை, மகாராட்டிரர் அல்லாத சில தலைவர்களும் கூறியிருக்கின்றனர். பிரதமருக்கு வேண்டுமானால் தனிப்பட்ட முறையில், அந்தத் தலைவர்களில் மிகப் பெரியவரெனக் கொள்ளத்தக்கவரைத் தெரிவிக்க என்னால் முடியும்

“வருகிற சில ஆண்டுகளுக்குள்ளாகவே, பம்பாய் நகரில் மகாராட்டிரர்களுடைய பொருளாதார நிலை சீர்குலைந்து போகும் இது, மகாராட்டிரர்களுக்கு மட்டுமல்ல—பம்பாய் நகரத்துக்கும்கூடக் கேடுதான்; புதிய மகாராட்டிர மாநிலத்துக்கும்கூட அது கேடு விளைவிப்பதாகும்.

“மகாராட்டிரர்களிடமிருந்து பம்பாய் நகரைப் பிரித்துவிடுவதின் மூலம் சர்க்கார், ‘பிரதேசவாரி வேற்றுமைகளை ஒழிப்போம்’ என்ற தன்னுடைய முன்னாள் கொள்கைக்கு முரணாக நடந்து கொள்வதின் மூலம் அமைதியின்மையை உருவாக்குகிறது; பம்பாய் நகரத்துக்கும்—அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குமிடையே ‘கொடுத்து வாங்கும்’ முறையைச் சீர்குலைக்கிறது; ‘ஏழையைப் பணக்காரன் சுரண்டி வாழ்வதை எதிர்க்க வேண்டும்’ என்ற கொள்கையை சர்க்கார் அவமதித்து நடந்துகொள்கிறது; அங்கு ‘சோஷலிச சமுதாய பாணி’ அமைப்பு முறை அறவே அவமதிக்கப்படுகிறது—அல்லது கைவிடப்பட்டுவிட்டது; முதலாளித்துவத்திற்குச் சர்க்கார் தனது ஆதரவைத் தருகிறது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டு விடுகிறது. ஆனால் ஏழையும், தொழிலாளியும், பாட்டாளிகளும் சேமித்து வைக்கிற பணத்தினால்தான் ‘முதல்’ ஏற்படுத்த முடியும். அந்த ‘முதலை’த் தந்திரமாகக்கையாண்டு வருவதினால்தான் ஒருவன் ‘முதலாளி’யாகி விடுகிறான். எனவே சுற்றுப்புறப் பகுதிகளிலிருந்து நகரங்களைப் பிரித்துவைப்பதென்ற சட்டமானது அநியாயமானதும், பொருளாதாரத்தில் நிவர்த்தி செய்யப்பட முடியாத பெருங்குறையுமாகும்.

“வருகிற 5 ஆண்டு காலத்தில் மகாராட்டிரப் பொதுமக்களும், தலைவர்களும், முதல்படிப் பிரிவினராகவே நடத்தப்பட இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனிடையில், பம்பாய் நகரம் மகாராட்டிரர்களிடம் விடப்படுமானால், பெரிய பெரிய குழப்பங்களையும், கலவரங்களையும் உருவாக்குவதென்று அங்குள்ள பெரிய ‘பணமுதலை’களிடையே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்ற தகவல்களும் கிடைத்துள்ளன. ஆனால், அவைகள் எல்லாம் இன்னும் வெளிப்படையாகக் கூறப்படவில்லைதான். இன்னும் மகாராட்டிரத் தலைவர்கள் பயிற்சி பெற வேண்டிய நிலையினராகவேதான் இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். இதனால்தான் அவர்கள் இந்தச் சிக்கலான பிரச்சினையைத் துறந்துவிடுவார்களோ என நான் அஞ்சுகிறேன்.

“பிரிட்டிஷார்கூட மகாராட்டிரர்கள் பற்றித் தம் கருத்தைக் கூறும்போது, அவர்கள் யுத்தம், குரோதம் ஆகியவைகளையெல்லாம் விரும்பாத குலத்தவர் என்று வர்ணித்திருக்கின்றனர்; ஆனால் நமது உள்நாட்டமைச்சர் பண்டித பந்தோ, அவர்களை, ‘அறிவுச் சூன்யங்கள்’ என்று வசைமொழிந்திருக்கிறார்.”

இந்தச் சமயத்தில் பண்டித பந்த், ‘தாம் அப்படிச் சொல்லவில்லை’ என்று மறுத்தார்.

தேஷ்முக் மீண்டும் அதை வலியுறுத்தி, ‘மகாராட்டிரர்கள் வெறும் மூர்க்கக் குணம் படைத்தவர்கள் என்றும், குஜராத்தியர்கள் சாந்தமானவர்கள்—அறிவாளிகள் என்றும் அமைச்சர் பந்த் கூறியுள்ளார்’ என்று குறிப்பிட்டார்.

“குஜராத்தியர்களிடம் மூர்க்கக் குணம் இல்லையென்றோ, அல்லது மகாராட்டிரர்களெல்லாம் அறிவாளிகள் என்றோ நான் ஒப்புக்கொள்ள முடியாது ஆனால் குஜராத்தும் சத்தியவாரும், போர் வெறியும், மூர்க்கத்தனமும் கொண்டுள்ளன என்பதற்கு வெகு அருமையான சரித்திர ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன.

“அகால்பேட், தென்குடால் தாலுகாக்கள் கன்னடத்திற்குச் சேரவேண்டுமென்பதாகத் தாங்கள் அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கும்படி மகாராட்டிரத் தலைவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டுள்ளனர். இந்தோ—ஆரிய—திராவிட மொழி எல்லைப் பிரச்சினைகளை மேற்கொள்ளுவதைப்[illegible] அளவு முக்கியத்துவம் இப்பிரச்சினைக்கும் தரப்பட வேண்டும்.

“பெல்காம் நகரின் பொது மொழி மராத்திதான்; முனிசிபல் ரிக்கார்டுகள்கூட மராத்தியிலேயேதான் இருந்துவருகின்றன. அந்நகரில் 54 சதவிகிதம்பேர் மாராட்டியரும், 30 சத விகிதத்தவர் கன்னடியருமாக இருக்கின்றனர். பெல்காம் மாணவர்களிடமிருந்து அண்மையில் பிரதமருக்கு ஒரு விண்ணப்பம் வந்தது; அந்தப் பெல்காம் மாணவர்கள், வேலையில்லாமல் இருக்கவேண்டியவர்களாகின்றனர். ‘இந்தியா முழுவதும் ஒன்றே’ என்று சொல்லிவிடுவது மிகச் சுலபம்; ஆனால் அம்மாணவர்கள் கஷ்டப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கின்றனர். இப்படிப்பட்ட சிக்கல்களை யெல்லாம் தீர்க்க வேண்டுமானால், வட்டார வேறுபாடுகளைத் தீர்க்க திட்டக் குழுவிற்கு அங்கீகாரம் தந்தாக வேண்டும்.

‘தேஷ்முக் கடந்த வாரத்தில் வெளியிட்ட அறிக்கையானது நாட்டில் அமைதியின்மையை உருவாக்குவதாக இருந்தது’ என்று உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டபோது, தேஷ்முக், சொன்னார்:—

“கிளர்ச்சிகள் விரும்பப்படாதவைதான்; ஆனால் நியாயமாக நடைபெறவேண்டிய கிளர்ச்சிகளைவிட, அநியாயமான முறையில் நடைபெறும் கிளர்ச்சிகள் மிக மிக மட்டரகமானவை—தீயன பயப்பவை. நான் குருதிடைக் குடிக்கும் அட்டையைவிட, ஒரு சிங்கத்தையே தேர்ந்தெடுத்துக் கொள்வேன்.”

சாது வேடத்தில் குற்றம் புரிவோர்

ஒழுங்குபடுத்த மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, ஜூலை 30—

நாட்டிலுள்ள சாதுக்கள், சந்நியாசிகள் ஆகியோர் பற்றிய புள்ளி விபரங்களைக் கொண்ட பதிவுச் சான்று ஏடு ஒன்று வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கோரும் மசோதா ஒன்று, மக்கள் சபையில் கொண்டுவரப்பட்டுள்ளது.

மசோதாவின் நோக்கங்களும், காரணங்களும் பற்றிய அறிக்கையில் ‘நாட்டில் சாதுக்கள், சந்நியாசிகள் ஆகியோரின் தொகை அதிகரித்து வருகிறது; சாது வேடத்தில் அவர்களில் பலர் நாடகத்தைகளிலும், பிச்சை எடுப்பதிலும், இதர சமூக விரோத நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்; இவற்றைத் தடுக்காவிடில் குற்றங்கள் அதிகரிக்க வழி ஏற்படும். இந்நிலையினின்றும் சாதுக்களை ஒழுங்குபடுத்த இம்மசோதா உதவும் சாதுக்கள் அல்லது சந்நியாசிகள் சம்பந்தப்பட்டுள்ள பல குற்றங்களைக் கண்டுபிடிக்கவும் இம்மசோதா சர்க்காருக்கு உதவும்’ என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உண்மையாகவா?

திருச்சியில் சட்ட—எஞ்சினீயரிங் கல்லூரிகள் நிறுவத் திட்டம்

திருச்சி மாவட்டத்தில் சட்டக் கல்லூரியும், எஞ்சினீயரிங் கல்லூரியும் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டிய திட்டங்கள் பற்றிய நகல் திட்டம், திருச்சி மாவட்டத் திட்ட போர்டில் ஒப்புதல் பெற்றதாம்.

நகல் திட்டத்தில், ரூ. 34,95,34,000 செலவுக்கான திட்டங்கள் அடங்கியுள்ளன

கட்டளை, புல்லம்பாடி கால்வாய் திட்டம்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படும்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கு நன்மை தரக் கூடியதெனக் கருதப்படும் ரூ 1,56,00,000 செலவு மதிப்பிடப்பட்டுள்ள கட்டளை உயர்மட்டக் கால்வாயும், ரூ. 1,42,00,000 செலவு மதிப்பிடப்பட்டுள்ள புல்லம்பாடி கால்வாயும் வெட்டப்படும் என்று தெரிகிறது.

காவேரி நதியின் தெற்குப் பாகத்தில் கட்டளை உயர்மட்டக் கால்வாயும், வடக்குப் பாகத்தில் புள்ளம்பாடி கால்வாயும் வெட்டப்படும்.

மூன்று பகுதியாக நிறைவேற்றப்படும் கட்டளை உயர் மட்டக் கால்வாய் திருச்சி மாவட்டத்தில் 57 குளங்களுக்கும், தஞ்சைமாவட்டத்தில் 62 குளங்களுக்கும் தண்ணீர் விநியோகம் செய்யும்; இதன் மூலம் தற்போதுள்ள 8,723 ஏகர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுடன், 3,277 ஏகர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கும்.

புல்லம்பாடி கால்வாய் 8,831 ஏகர் நிலங்களுக்கு நேரடியாக நீர்ப்பாசன வசதி அளிப்பதுடன், 12,283 ஏகர் நிலங்களுக்கு ஏரிகளின் மூலம் நீர்ப்பாசன வசதி அளிக்கும்; குளங்களுக்கும் தண்ணீர் விநியோகிக்கும்.

எட்டு பொருள்களுக்கு

ஒரு கட்ட விற்பனை வரி

1957 ஏப்ரல் முதல் அமுலாகும்

சென்னை, ஜூலை 30—

காப்பி, தேயிலை, சிமெண்டு மோட்டார் கார்கள், ரிப்ரிஜிரேடர் (குளிர் சாதனப் பெட்டி)கள், கிரோசின், இரசாயன உரம், வெல்லம் ஆகிய எட்டு பொருள்களுக்கு, 1957 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து ஒரு கட்ட விற்பனை வரி விதிக்க சர்க்கார் தீர்மானித்துள்ளனர்.

மோட்டாருக்கும், குளிர் பதனச் சாதனப் பெட்டிக்கும் ரூபாய்க்கு 1 அணா; காபி, தேயிலை, சிமெண்டு கிரோசின், வெல்லம் ஆகியவற்றிற்கு ரூபாய்க்கு $\frac{3}{4}$ - அணா; இரசாயன உரத்துக்கு ரூபாய்க்கு $\frac{1}{2}$ அணா வீதம் வரி விதிக்கப்படும்; இதற்கான திருத்த மசோதா சர்க்காரால் கொண்டு வரப்படும்.

மாற்றும் உத்தேசத்தை சர்க்கார் கைவிட்டனர்

சென்னை, ஜூலை 30—

பல்லாவரம் இடுகாட்டை இப்பொழுதுள்ள இடத்திலிருந்து மாற்றும் உத்தேசத்தை சர்க்கார் கைவிட்டுவிட முடிவு செய்துள்ளார்கள்.

வீடுகளுக்கு அருகாமையில் மயானம் இருப்பதாகவும், பொது சுகாதாரத்தை உத்தேசித்து வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் கோரப்பட்டது.

எல்லைக் குழு நியமிக்க முடியாதாம்!

சச்சரவுக்கும் குழப்பங்களுக்கும் தொடர்ச்சியாக இடந்தருமாம்

தகராறுகளை 'வட்டாரக் குழு'க்கள் தீர்த்துவிடுமென நம்பலாமாம்

உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் கூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 31—

'தொடர்ச்சியான குழப்பங்களுக்கும்—சச்சரவுகளுக்குமே இடந் தருமாதலால், மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைத் தகராறுகள் குறித்து எல்லைக் குழு நியமிப்பது முடியாது.

"புதிய மாநிலங்கள் புதிய எல்லைகளுடன் உருவாக்கப்பட்டான பின்னர், வட்டாரக் குழுக்கள் நியமிப்பதின்மூலம் அத்தகுத் தகராறுகள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்று நம்பலாம்,"

—என்று மத்திய சர்க்கார் உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் அவர்கள், மாநிலங்களுக்கிடையே எல்லைத் தகராறுகளுக்கு முடிவுகள் காண்பது குறித்து வட்டாரக் குழுக்கள் ஏற்படுத்துவதென்ற மாநிலச சீரமைப்பு மசோதா பற்றிய விவாதத்தின்போது பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'மொழிவாரி பிரதிநிதித்துவச் சிறுபான்மையினர் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 'தாழ்த்தப்பட்டோர், பிற்பட்ட வகுப்பினர்களின் நலன்களைக் கவனித்துக்கொள்ள ஒரு விசேட அதிகாரி—கமிஷனர் நியமிப்பது என்ற லங்காசுந்தரம் அவர்களின் யோசனை, சர்க்காரின் தீவிர பரிசீலனையில் இருந்துவருகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'பம்பாயைப் பொறுத்தவரையில், 5 ஆண்டுகளுக்குப் பிறகு பம்பாயின் எதிர்காலம் குறித்து மக்களுடைய விருப்பமே ஏற்றுக்கொள்வதென்றாலும், அப்பிரச்சினையில் எவ்வித பலாத்காரமோ, அதைப் போன்ற பிற நடவடிக்கைகளுக்கோ இடமிருக்காது; ஆனாலும், மக்களிடையே அப்போது நிலவிவரும் பொதுவான கருத்துக்கள்—நாட்டின் நிலைமை முதலியன கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும்.

"மாநிலங்களைத் திருத்தி அமைப்பதில் மேற்கொள்ளப்பட்ட முறைகள் சட்டத்திற்குப் புறம்பானவைகளோ அல்லது எதேச்சாதிகாரமானவைகளோ அல்ல; அப்படி நடைபெற்றிருக்குமானால் அது ஜனநாயகத்தை அவமதிப்பதாகும்."

'ஆந்திர மாநிலப் பிரிவினை குறித்து நேரு அவர்கள் தமது சக அமைச்சர்களைக் கலந்தாலோசிக்காமலேயே முடிவு தெரிவித்தார்' என்ற தேஷ்முக் அவர்களின் குற்றச்சாட்டைச் சுட்டிக்காட்டி அமைச்சர் பந்த்,

'இது விஷயத்தைக் கடந்த 1949-ம் ஆண்டிலேயே அமைச்சரவைகூடி விவாதித்து ஒரு முடிவு மேற்கொண்டது; அந்த முடிவை அடிப்படையாக வைத்தே ஆந்திர மாநிலப் பிரிவினை பற்றிய செய்தி வெளியிடப்பட்டது,' என்று கூறியிருக்கிறார்.

"இந்தப் பிரச்சினையில் வேண்டிய அளவு கவனம் செலுத்தப்பட்ட பின்னரும், ஒவ்வொரு கோணத்திலிருந்தும் கிடைக்கப்பட்ட கருத்துக்கள், அறிவுரைகள், உதவிகள் ஆகியவற்றை எல்லாம் கடைப்பிடிக்க எல்லாவித நடவடிக்கைகளும் மேற்கொண்ட பின்னரும்கூட, அப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் மேற்கொள்ளப்பட்ட வழி முறைகள் குறித்து இன்னும் சந்தேகங்கள் கிளம்பிக்கொண்டிருப்பது வருந்தத் தக்கதாகும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

குடியரசுத் தலைவர் ஆட்சி வேண்டுமாம்

கெய்ரான் தலைமையிலுள்ள பஞ்சாப் மந்திரி சபை பதவியிலிருந்து விலக வேண்டுமெனவும், பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற வேண்டுமென்றும், அகில இந்திய இந்து மகாசபைக் காரியக் கமிட்டி கோரிக்கை விடுத்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

மேலூர் வட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"3—8—56 காலை 10-மணியளவில், மேலூர் நகர் கழக அலுவலகத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் முன்னிலையில், மேலூர் வட்டக்குழு அமைப்புக் கூட்டமும், ஊழியர் கூட்டமும் நடைபெறவிருப்பதால் மேலூர் வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்,"

என்று, மேலூர் நகர்க்கிளை தி. மு கழகச் செயலாளர் ப. தங்கவேலர் அறிவிக்கிறார்.

தமிழ் மக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மளிக்கப்படவில்லையென்று தெரியவருகிறது.

கல்லோயாவிற்கு வருகைதந்த பிரதமருக்கு மிக அவசர அவசரமாக ஒரு வரவேற்பளிக்க கல்முனை நகர சபை நடவடிக்கை எடுத்தது. அந்த வரவேற்பு நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ்ப் பேசும் மக்களின் மனதைப் பெரிதும் புண்படுத்துவதாயிருந்தது.

தமிழ் மொழிக்கு உரிய இடத்தை அரசியலில் கொடுக்க மறுத்த பிரதமருக்கு—அதிலும் மொழி மசோதா நிறைவேற்றப்பட்டு ஒரு மாதம்கூட முடிவதற்கு முன்பு வரவேற்பு கொடுப்பதானது பொருத்தமற்றதென்றும் பெரும்பாலான மக்கள் எதிர்த்திருக்கின்றனர். பிரதமருக்கு அளிக்கப்படும் வரவேற்பில் கலந்துகொள்ள வேண்டாமென்று கேட்டு, நூற்றுக்கு அதிகமான தந்திகள் அனுப்பப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கல்முனை வரவேற்பு நிகழ்ச்சியில் ஊர்வலம் முக்கிய இடம் பெற்றிருந்தது. கல்முனை-காரைதீவு வீதியிலிருந்து ஊர்வலமாக நகரசபை மண்டபத்திற்குப் பிரதமரை அழைத்துப்போவதாக இருந்தது.

ஐந்நூற்றுக்கும் அதிகமான இராணுவத்தினரும், நூற்றுக்கணக்கான போலீஸ்காரர்களும் வீதிகளைக் காவல்காத்து நின்றும்கூட போலீஸ்—இராணுவப் பாதுகாப்புடன்வந்த பிரதமர் கல்முனை நகரசபை மண்டபத்திற்கு நேராகவே போயிறங்கினாரென்று தெரிகிறது.

நாகர்கள் சுதந்திரக் கோரிக்கையை ஒடுக்கப் புதிய முறை!

மனோதத்துவ முறையில் பரிகாரம் காண வேண்டுமாம்

நாகா பிரச்சினையைத் தீர்ப்பதில் இராணுவ நடவடிக்கை மட்டுமின்றி, அரசியல், மனோதத்துவ ரீதியிலும் பரிகாரம் காண வேண்டும் என்று சர்க்கார் கருதுவதாக உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் மக்கள் சபையில் கூறியுள்ளார்.

"பலாத்காரத்தை நிறுத்த இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆனால், நாகர்களை ஒடுக்க வேண்டுமென்பது எங்கள் விருப்பமல்ல; அவர்கள் மனதை மாற்றி நமது தேசிய வாழ்க்கையில் அவர்கள் நல்ல குடிமக்களாக வாழ வேண்டுமென்பதும், அவர்களுடைய தனிப்பட்ட நாகரீகமும், வாழ்க்கை வழியும் அப்படியே காப்பாற்றப்பட வேண்டுமென்பதும் தான் எங்கள் ஆவல். அவர்கள் 'அற்புதமானவர்'கள்; எனவே, பொருளாதார அபிவிருத்தியின் பலன்களை அவர்களும் பெற வேண்டுமென்பது எங்கள் பேரவா" என்றும், பந்த் கூறியிருக்கிறார்.

"ஆயினும் பயமுறுத்தல்கள் அல்லது பலாத்காரச் செயல்களினால் சர்க்காரை ஒரு முடிவுக்கு வருமாறு மிரட்டவோ அல்லது கட்டாயப்படுத்தவோ இடந்தர முடியாது. நாட்டின் ஒற்றுமைக்குப் பங்கம் நேரவும் விடமாட்டோம்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சிறப்புக் கூட்டம்

5—8—56 காலை 10-மணியளவில், மதுரை பழனி டாக்கீசில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'எதிர்ப்புகள்' என்றதலைப்பில்விரிவுரையாற்றுவார்.

நன்கோடை அணா 8, 4

—நகர் தி. மு கழகம், மதுரை

கழகக் கூட்டம்

★

மேலூர்:

(மதுரை மாவட்டம்)

முனியாண்டி கோவில் திடலில் 3—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:

ஏ. வேலுச்சாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். முத்து

பர்மாவுக்குள் சீனப் படைகள்?

பிகிங் சர்க்காரை பர்மா விளக்கம் கேட்கிறது

இரங்கூன், ஜூலை 31—

நூற்றுக்கணக்கான கம்யூனிஸ்டு சீனத் துருப்புகள், பர்மிய எல்லையைக் கடந்து பூடௌன்-குன்லாங்கிற்கு இடையே சுமார் 500 மைல் தூரத்திற்குப் புகுந்திருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி பகுதிகளில் புகுந்த துருப்புகள், சில கிராமங்களைத் தம் வசப்படுத்திக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது

வடகிழக்கு பர்மாவிலுள்ள வா' மாநிலத்தில் சீனத் துருப்புகள் புகுந்திருப்பதைப் பற்றி பீகிங் சர்க்காரிடம் விளக்கம் கேட்க ஏற்பாடுசெய்து வருவதாக பர்மா சர்க்கார் அறிக்கையொன்று தெரிவித்திருக்கிறது. இது குறித்து ஆலோசனை செய்ய மந்திரி சபையை பிரதமர் கூட்டவில்லை யென அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கருணாநிதி சுற்றுப்பயணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவைகுண்டம்:

26—7—56ல், திருவைகுண்டத்தில், தி. மு கழகச் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் பெரியதோர் விழாபோல் நடைபெற்றது

ஊரெங்கும் விழாக்கோலம் கொண்டு, வளைவுத் தட்டிகளும், வாண வேடிக்கைகளும் நிறைந்து கழகத் தோழர்களும், சுற்று வட்டாரத்துப் பொதுமக்களுமாக ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் குழுமியிருந்தனர். சென்னை கடற்கரைக் கூட்டமோ என ஐயுறும் வகையில் பொருனை ஆற்று மணலில் அந்த மக்கள் வெள்ளம் கரைபுரண்டது.

சென்னையிலிருந்து தோழர் மு. கருணாநிதியும், மதுரை தோழர் எஸ். முத்துவும் சரியாக இரவு 8 மணிக்கு திருவைகுண்டம் வந்து சேர்ந்தனர்; தோழர் நெல்லையப்பர் அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது செயலாளர் ஜெகவீரராஜேந்திரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்; தோழர் கருணாநிதிக்கு வாழ்த்திதழ் அளிக்கப்பட்டது.

பின்னர், தோழர்கள் கருணாநிதி, முத்து இருவரும் அரியதோர் உரையாற்றினர்; மக்கள், உணர்ச்சியும், உரிமை விளக்கமும் பெற்றனர்.

முக்கூடல்:

27-6-56 மாலை 6 மணிக்கு முக்கூடல் பாண்டியன் அரங்கில் மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற பல்லாயிரக்கணக்கான மக்களடங்கிய பொதுக்கூட்டத்தில் தோழர் கருணாநிதி சொற்பொழிவாற்றினார்.

முதலில் அலிசேக் மன்சூர் சிறிதுநேரம் பேசினார்

ஒன்பதாண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி விளைவித்துள்ள கேடுகள் பற்றியும், ஆட்சியின் ஊழல்கள் பற்றியும் கருணாநிதி விளக்கினார். தோழர்கட்கு ஏராளமான கைத்தறி ஆடைகள் வழங்கப்பட்டன தோழர் முத்துக்குட்டி நன்றி நவில கூட்டம் இரவு 10-மணிக்கு முடிவுற்றது.

ஏர்வாடி:

28-6-56 மாலை $4\frac{1}{2}$ மணிக்கு ஏர்வடியில் தோழர் கருணாநிதிக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பதில் அளித்து, தோழர்கள் மு. கருணாநிதியும், எஸ் முத்துவும் தற்கால அரசியல் நிலையில் தி. மு. கழகத்தின் கடமையை விளக்கினர்.

கழகச் செயலாளர் மீரான் தோழர் அலிசேக் மன்சூர் ஆகியோரும் சிறிதுநேரம் பேசினர்.

ஊரெங்கும் அலங்கரிக்கப்பட்டு எழுச்சிமிக்கதாய்க் காணப்பட்டது வாழ்த்து இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டது. கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

மாலை $5\frac{1}{2}$-மணிக்கு அங்கிருந்து கருணாநிதியும், முத்துவும் களக்காடு கூட்டத்திற்குச் செல்லும் வழியில் பத்மனேரி தி. மு கழகத் தோழர்கள் அளித்த வரவேற்பைப் பெற்றனர்.

களக்காடு:

அன்றிரவு 7 மணிக்கு களக்காட்டில் தோழர் சேது அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கருணாநிதி, முத்து இருவரும் நீண்ட சொற்பொழிவாற்றினர் தி. மு. கழகத்தின் அரசியல்—சமுதாய—பொருளாதார நிலைமைகளும், கொள்கைகளும், திட்டங்களும் விளக்கப்பட்டன.

தோழர்கட்கு ஏராளமான கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

இராசபாளையம்:

29—7—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, இராசபாளையத்தில் தோழர் கனகசபாபதி தலைமையில் பல்லாயிரவர் திரண்டிருந்த மாபெரும் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது. பல இடங்களில் தோழர் கருணாநிதியால் கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன.

பொதுக்கூட்டத்தில், தோழர் மதுரை எஸ். முத்து பேசியபின், தோழர் மு. கருணாநிதி பேசத் துவக்கினார்.

அவர் பேசிக்கொண்டிருக்கும் போது காங்கிரஸ் கட்சியினர் சிலர், கூட்டத்திற்கிடையே குழப்பம் செய்ய முனைந்தனர். அவர்களின் பெருமுயற்சி தோல்வியடைந்தது.

தோழர் கருணாநிதியின் வேண்டுகோளுக்கிணங்க, பொதுமக்கள், மிக அமைதியாக உட்கார்ந்த இடத்தைவிட்டு நகராமல் கூட்டத்தைக் கவனித்தனர்

குழப்பம் செய்ய முயன்ற குண்டர்கள், 'ஒழிக கூச்சலை' எவ்வளவுதான் உரக்க எழுப்பியபோதிலும், கற்களை வீசியபோதிலும் கூட்டத்திலேயிருந்து யாரும் குழப்பமுள்ள பகுதியைத் திரும்பிப் பார்க்காமல், சொற்பொழிவையே உன்னிப்பாகக் கவனித்தனர்.

சிறிதுநேரம் கூச்சலிட்டுவிட்டு காங்கிரஸ் தோழர்கள் கலைந்தனர்.

பலாத்காரத்தில் இறங்கமுனைந்த ஒரு சிலரைப் போலீசார் கைது செய்தனர்.

குழப்பம் செய்ய முயன்றவர்களுக்கு விடையளித்து, சுமார் ஒன்றரை மணி நேரத்துக்கு மேல் தோழர் கருணாநிதி ஆவேசமாகப் பேசிமுடித்தார் இரவு $8\frac{1}{2}$ மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

சத்திரப்பட்டி:

அன்றிரவு 10 மணிக்கு, சத்திரப்பட்டியில், தோழர் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில், தோழர்கள் மு. கருணாநிதி, மதுரை-முத்து, திராவிடமணி ஆகியோர், 'தி மு. கழகமும்—கைத்தறியாளரும்' என்பது பற்றி விரிவுரையாற்றினர். இரவு $12\frac{1}{2}$ மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது. பல்லாயிரம் தொழிலாள மக்கள் கொள்கை விளக்கம் பெற்றனர்.

சங்கரன்கோயில்:

30—7—56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு சங்கரன்கோயில் தி. மு கழகச் சார்பில் தோழர் சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, மதுரை-முத்து ஆகியோர், 'நேருவின் வெளிநாட்டுப் பயணத்தால் நமக்கு என்ன நன்மை—காமராசர் ஆட்சி சாதித்தவை யாவை?- என்பவைகளை விளக்கி விரிவுரையாற்றினர். இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது. தோழர்களுக்கு கைத்தறி ஆடைகள் ஏராளமாக அணிவிக்கப்பட்டன.

இராமநாதபுர மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்களுக்கு:

"நமது மாவட்டச் சுற்றுப் பயணத்திற்காக ஆகஸ்டுத் திங்கள் கடைசி வாரத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, சிவ சண்முக சுந்தரம், எஸ்.எஸ். தென்னரசு ஆகியோர் வர ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

"கூட்டம் நடத்த விரும்பும் கிளைக் கழகச் செயலாளர்கள், உடனடியாக எனக்கு எழுதி விளக்கம் பெற வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுர மாவட்டச் செயலாளர் தோழர் இ. எஸ். எம். சௌந்திரபாண்டியன் அவர்கள் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.